# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2022 ஏப்பிறல்

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2022 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன**

**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், பருவகால போக்குகளைத் தொடர்ந்தும் அத்துடன் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் தயாரித்தல் நடவடிக்கைகளில் சுருக்கத்தினை எடுத்துக்காட்டியும் 2022 ஏப்பிறலில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.** அதற்கமைய, தயாரித்தல் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது முன்னைய மாதத்திலிருந்து 21.4 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2022 ஏப்பிறலில் 36.4 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது. மாச்சு மாதத்தின் பருவகால உச்சத்துடன் ஒப்பிடுகையில் உற்பத்தி, புதிய கட்டளைகள், கொள்வனவுகளின் இருப்பு மற்றும் தொழில்நிலை துணைச் சுட்டெண்களில் அறிக்கையிடப்பட்ட குறிப்பிடத்தக்க குறைவுகள் இதற்குக் காரணமாக அமைந்தன.

உற்பத்தியில் குறிப்பாக, உணவு மற்றும் குடிபானம் அத்துடன் புடவைகள் மற்றும் ஆடைகள் துறைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிக்கு புத்தாண்டு விடுமுறை நாட்கள் காரணமாக மாதகாலப்பகுதியில் குறைவான வேலைநாட்கள் மற்றும் நிலவுகின்ற மின்சார தடைகள்/ சக்தி பற்றாக்குறைகள் உள்ளடங்கலாக வழங்கல்பக்க தடைகள் காரணமாக அமைந்தன. புதிய கட்டளைகளில் குறிப்பாக உணவு மற்றும் குடிபான தயாரிப்புத் துறையில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிக்கு பண்டிகைப் பருவகாலக் கேள்வி முடிவடைதல் காரணமாக இருந்தது. புத்தாண்டு விடுமுறைகளைத் தொடர்ந்து வரவின்மை அதிகரிப்புடன் தொழில்நிலையும் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. மேலும், உள்நாட்டுச் சந்தையில் தேவையான அளவுகளில் கிடைக்கப்பெறாமை அத்துடன் பொருட்கள் இறக்குமதிக்காக நாணயக்கடிதங்களைத் திறப்பதில் இடர்பாடுகள் என்பவற்றை பிரதான காரணமாகக் கொண்டு கொள்வனவுகளின் இருப்பும் வீழ்ச்சியடைந்தது. தேவையான பொருட்கள் கிடைக்கப்பெறாமையின் காரணமாக தமது உற்பத்தியினை குறைத்துக்கொண்டதாக பல பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். அதேவேளை, பன்னாட்டு ஏற்பாட்டுச் சேவைப் பிரச்சனைகள், வெளிநாட்டு கொடுப்பனவுச் சிக்கல்களின் காரணமாக அப்புறப்படுத்தல் தாமதங்கள் அத்துடன் டீசல் பற்றாக்குறை என்பவற்றின் பிரதான காரணமாக 2022 ஏப்பிறலில் வழங்குநர் விநியோக நேரம் உயர்வானவேகத்தில் நீட்சியடைந்தது.

| மாறி | மாச் 2022 | ஏப் 2022 | +/- | சுருக்கம் |
| --- | --- | --- | --- | --- |
| **கொ.மு.சு** | **57.8** | **36.4** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 66.5 | 32.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| உற்பத்தி | 56.9 | 19.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 52.2 | 43.4 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 45.2 | 28.0 | - | சுருக்கமடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 57.5 | 70.6 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

பல்வேறு கோணங்களிலிருந்தும் உயர்வடைகின்ற நிச்சயமின்மைகள் பற்றி தயாரிப்பாளர்கள் கரிசனை கொண்டுள்ளமையினால் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள் 2022 ஏப்பிறலில் மேலும் சீர்குலைந்தன.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 36.4**

**2022 மாச்சுடன் ஒப்பிடுகையில் 21.4 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு மாச்சிலிருந்து 0.7 சுட்டெண் புள்ளிகள் வீழ்ச்சியுடன் ஏப்பிறலில் 52.2 பெறுமதியினைப் பதிவுசெய்தது.

2022 ஏப்பிறலில் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சுட்டெண்கள் உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் ஐரோப்பிய வலயத்தில் மெதுவான வீதத்தில் இச்சுட்டெண் அதிகரித்தது. எனினும், சீனா மற்றும் ரஷ்யா நாடுகளின் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஏப்பிறலில் சீர்குலைந்தன.

*மூலம்: மார்க்கிட்[1], 2022 மே 15இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 43.8**

2022 மாச்சுடன் ஒப்பிடுகையில் 7.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி

நாட்டில் நிலவுகின்ற பொருளாதார, சமூக மற்றும் அரசியல் உறுதிப்பாட்டின்மைக்கு மத்தியில் **பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2022 ஏப்பிறலில் 43.8 சுட்டெண் பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்து பணிகள் துறை முழுவதும் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.**

புதிய வியாபாரங்கள், 2021 ஓகத்து தொடக்கம் முதற்தடவையாக குறிப்பாக, தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம், காப்புறுதி, உண்மைச் சொத்து மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட சீர்குலைவுகளுடன் 2022 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தது.

வியாபாரத் தொழிற்பாடுகளுக்கு ஏற்பட்ட தொடர்ச்சியான இடையூறுகளின் காரணமாக 2022 ஏப்பிறலில் தொழில் நடவடிக்கைகளும் வீழ்ச்சியடைந்தன. நீண்ட நேர மின்சாரத் தடைகள் மற்றும் எரிபொருள், எரிவாயு உள்ளடங்கலாக உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகள் என்பன இதற்குப் பிரதான காரணங்களாக அமைந்தன. மேலும், கொள்வனவு சக்தியில் குறைவடைதல், சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் வீழ்ச்சி மற்றும் நாட்டில் காணப்பட்ட நிச்சயமின்மைகள் என்பனவற்றுக்கு மத்தியில் குறைவடைந்த கேள்வியும் சில துணைத் துறைகளின் தொழில் நடவடிக்கைகளை எதிர்மறையாகப் பாதித்தன. அதற்கமைய, தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம், தொழில்சார் பணிகள், கல்வி, காப்புறுதி, உண்மைச் சொத்து துணைத் துறைகள் மாதத்திற்கு மாதகாலப்பகுதியில் பாரிய சுருக்கங்களைப் பதிவுசெய்தன. எதுஎவ்வாறிருப்பினும், பல கம்பனிகள் பிரதானமாக மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக அத்துடன் ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் துணைத் துறைகளில் உள்ளவை பண்டிகைக் காலக் கேள்வியினால் துணையளிக்கப்பட்ட முன்னேற்றத்தை அவதானித்தன.


ஒப்பந்தம் காலாவதியடைதல், ஓய்வுபெறுதல் மற்றும் பதவிவிலகுதல் காரணமாக தொழில்நிலை 2022 ஏப்பிறலில் சிறிதளவு வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. மின்துண்டிப்பு, வழங்கல் பற்றாக்குறைகள் அத்துடன் போக்குவரத்து இடர்பாடுகள் காரணமாக நிலுவையிலுள்ள பணிகள் 2021 செத்தெம்பரிலிருந்து முதற்தடவையாக அதிகரித்தன.

| மாறி | மாச் | ஏப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **51.3** | **43.8** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | | |
| புதிய வியாபாரங்கள் | 56.8 | 41.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில் நடவடிக்கை | 52.1 | 40.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 54.2 | 49.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 48.9 | 52.8 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 44.8 | 34.7 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நீண்ட மின்துண்டிப்புக்கள், வழங்கல் பற்றாக்குறைகள் அத்துடன் எரிபொருள், எரிவாயு மற்றும் ஏனைய உள்ளீடுகளின் விலைகளில் சடுதியான அதிகரிப்புக்கள், கடன்பெறுதல் செலவுகளில் அதிகரிப்பு அத்தியாவசியமற்றவற்றுக்கான குறைவடைந்த கேள்வி அத்துடன் நாட்டின் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக உறுதிப்பாடின்மை என்பன காரணமாக அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேலும் சீர்குலைந்தன.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

*உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2022 மாச்சில் 53.4 இலிருந்து 2022 ஏப்பிறலில் 51.9 ஆக பதிவாகி உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் சுருக்கத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஏப்பிறலில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை, சீனாவின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினைக் காண்பித்தது.

*(மூலம்: மார்க்கிட்[1], மே 15, 2022 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினை கொண்டுள்ளன.